Banks up to 40 per cent of the value in the case of applications for loans for the discharge of prior debts and up to 50 per cent in the case of applications for loans for direct land improvements.

(c) Does not arise.

New libraries for North Arcot district

*** 44 Q.—SRI S. M. ANNAMALAI:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்ட மத்திய நூல் நிலையத்திலிருந்து எத்தனை நூல் நிலையங்களுக்கு அனுமதி கோரப்பட்டன?

(ஆ) எத்தனை நூல் நிலையங்களுக்கு சர்க்கார் அனுமதி தந்துள்ளனர்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Two.

(ஆ) Two.

SRI S. M. ANNAMALAI: ஸார், இப்போது கிராமங்களுக்கு அதிகமான அளவில் லைப்ரரிகள் தேவைப்படுவதால் இன்னும் அதிகமான லைப்ரரிகளை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்கார் இதை நேரடியாக நடத்துவது இல்லை. "லைப்ராரி அத்தாரிட்டீஸ்" இருக்கிறார்கள்; அவர்கள் எங்கெங்கு லைப்ராரிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் வட ஆர்க்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் 19 கிளை நூல் நிலையங்கள் இது வரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

Tanneries

*** 45 Q.—SRI V. K. KOTHANDARAMAN:** கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1959 வரை தோல் பதனிடும் தொழிலுக்கு சர்க்கார் கடன் உதவி எத்தனை பேருக்கு கொடுத்துள்ளார்கள்?

(ஆ) எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) 558 (five hundred and fifty-eight).

(ஆ) Loans are granted for the purchase of machinery or for construction of pits, working capital, etc.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், நமது ராஜ்யத்தில் தோல் பதனிடும் தொழில் வட ஆர்க்காடு ஜில்லாவில் 90 சதவீதம் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அம்மாதிரிப்பட்ட இடங்களுக்கு இந்தத் தொழிலுக்காக "லோன்" கேட்கும் போது மறுக்கப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இல்லையென்றால் இனிமேல் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா?